**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**முன்னிலை :** திருமதி. மு.அலிமா, பி.ஏ., எல்.எல்.எம்,

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

நாகர்கோவில்.

**2024 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 20 – ம் நாள் புதன்கிழமை**

**அசல் வழக்கு எண். 199/2020–ல் உள்ள**

**இ.ம.எண். 2/2020**

1. இந்திரா பிரியதர்ஷினி
2. ராணிகி ஜான்சி லட்சுமிபாய் ... மனுதாரர்கள் / வாதிகள்

/ எதிர் /

1. S. மரியதாசன்
2. T. வைகுண்டமணி
3, சார்பதிவாளர் அவர்கள்
ராஜாக்கமங்கலம் சார்பதிவாளர் அலுவலகம்
... எதிர்மனுதாரர்கள் /பிரதிவாதிகள்

இம்மனுவானது 14.11.2024–ம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதி விசாரணைக்காக வந்தபோது 1வது மனுதாரர்/1வது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் V. தேவ பிரசன்னா அவர்கள் ஆஜராகியும், 2வது மனுதாரர்/2வது வாதிக்கு எதிராக அசல் வழக்கானது 09.08.2023 ல் இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ள நிலையிலும், 1வது எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்உரை தாக்கல் செய்யப்படாததால் ஒருதலைபட்சம் ஆக்கப்பட்டும், 2–வது எதிர்மனுதாரர்/2–வது பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. J. பார்த்தசாரதி அவர்கள் ஆஜராகியும், 3–வது எதிர்மனுதாரர் / 3–வது பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 1வது மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, 2, 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்உரை, அசல் வழக்கு கோப்பு மற்றும் 3 எதிர்மனுதாரர் தரப்பு வாத உரை ஆகியவைகளை பரிசீலனை செய்து, இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்துவந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

இம்மனுவானது, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2 மற்றும் பிரிவு 151–ன் கீழ் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளோ, அவர்களது வகையாட்களோ பத்திரங்கள் பதிவு செய்தோ வேறு விதங்களிலோ பட்டிகை வஸ்துவில் மனுதாரர்கள்/வாதிகளின் அனுபவத்திற்கு இடைஞ்சல் செய்யக்கூடாதென அசல் வழக்கு முடியும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளை பிறப்பிக்க கோரி மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **1 வது மனுதாரர்/1 வது வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்**:–

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் 1–வது வாதி என்றும், இந்த அபிடவிட் மற்றும் மனு ஆகியவற்றை தனக்காகவும் மற்றும் 2–வது வாதிக்காகவும் தாக்கல் செய்துள்ளதாகவும், வாதிகள் இருவரும் கன்னியாகுமரி மாவட்டம், மணவாளக்குறிச்சி, சேரமங்கலம் பொட்டலில் வசித்து வரும் 31.03.2014 அன்று காலம் சென்ற பொன்னுசாமி நாடாரின் பெண் மக்கள் என்றும், மனுதாரர்கள்/வாதிகளின் தந்தை பொன்னுசாமி நாடார் ஆஸ்திரேலியா, உகாண்டா மற்றும் பல நாடுகளில் தொழில்கள் செய்து பல கோடி ரூபாய்கள் சம்பாதித்து இந்தியாவில் சென்னை, திருநெல்வேலி, கன்னியாகுமரி, திருவனந்தபுரம் ஆகிய பல இடங்களில் பலகோடி ரூபாய் மதிப்புள்ள பல சொத்துக்களை விலைக்கு வாங்கி அனுபவித்து வந்துள்ளார் என்றும், 2–வது பிரதிவாதி மனுதாரர்களின் தாயார் குமாரிதங்கத்தின் சகோதரியின் மகன் என்றும், மனுதாரர்கள் மைனர் சிறுமிகளாக இருந்த காலகட்டத்தில், மனுதாரர்களின் தந்தை பொன்னுசாமி நாடாரிடமிருந்து ஏற்கனவே விவாகரத்து பெற்றிருந்த சுகுமாரி பிரதீபா அவர்கள் பொய்யான பல வழக்குகளை தாக்கல் செய்து மனுதாரர்களது தந்தை பொன்னுசாமி நாடாரை துன்பப்படுத்தி வந்துள்ளார் என்றும், அதனால் மனுதாரர்களின் தந்தை பொன்னுசாமி நாடார் மனகவலைகளின் காரணமாக அடிக்கடி சுகவீனமாகிவிடுவது வழக்கம் என்றும், மனுதாரர்களின் தாயார் குமாரிதங்கத்திற்கு எழுத படிக்க தெரியாது என்றும், அதனால் மனுதாரர்களின்

தந்தை பொன்னுசாமி நாடாருக்கு எதிராக தாக்கலான வழக்குகளை நடத்தவும், சொத்துக்களிலுள்ள வருமானங்களை எடுத்து சொத்துக்களை பராமரிக்கவும், மனுதாரர்களின் தந்தை பொன்னுசாமி நாடாரின் நண்பர் மணவாளக்குறிச்சி மாதவிளையை சேர்ந்த கோபாலகிருஷ்ணன் என்பவரும் உறவினரான 2–வது பிரதிவாதி வைகுண்டமணியும் மனுதாரர்களின் தந்தை பொன்னுசாமி நாடாருக்கு மேனேஜர்களாக செயல்பட்டனர் என்றும், மனுதாரர்களது தாய், தந்தையான பொன்னுசாமி நாடாரும், குமாரிதங்கமும் மேற்படி நபர்களை மிகவும் நம்பினார்கள் என்றும், மனுதாரர்களின் தந்தை பொன்னுசாமி நாடார் தனது சொத்துக்களில் சில சொத்துக்களை மைனர்களாக இருந்த மனுதாரர்கள்/வாதிகளுக்கு செட்டில்மெண்டு எழுதி வைத்துள்ளார் என்றும், நாளடைவில் 2–வது பிரதிவாதியும், அவர் கூட்டாளிகளும் சேர்ந்து மனுதாரர்களின் தந்தை பொன்னுசாமி நாடாரின் இயலாமை, மனுதாரர்களின் தாயார் குமாரிதங்கத்தின் கல்வி அறிவில்லாமை அத்தோடு 2–வது பிரதிவாதியிடம் அவர்கள் வைத்திருந்த நம்பிக்கை ஆகியவற்றை தவறாக பயன்படுத்தி 2–வது பிரதிவாதியும், அவருடைய கூட்டத்தாரும் திட்டமிட்டு மனுதாரர்களின் சொத்துக்களை மோசடியாக அபகரித்து பணம் சேர்க்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் திட்டமிட்டு செயல்பட்டுள்ளனர் என்றும், வழக்குகளை நடத்துவதற்காக என பொய்கூறி பல அதிகார பத்திரங்களை பொய்யான காரணங்களை கூறி தயாரித்துள்ளனர் என்றும், 2–வது பிரதிவாதி, அவரது மனைவி கலாவதி, அவருடைய கூட்டாளி கோபாலகிருஷ்ணன் மற்றும் பலர் கூட்டாக திட்டமிட்டு சட்டவிரோதமாகவும், மனசாட்சிக்கெதிராகவும் பொய்யான காரணங்களை கூறி மனுதாரர்களின் தாய், தந்தையான பொன்னுசாமி நாடாருக்கும், குமாரிதங்கத்திற்கும், மைனர்களாக இருந்த மனுதாரர்களுக்கும் சொந்தமான சொத்துக்களை பொறுத்து மோசடியாக பல பத்திரங்கள் தயாரித்து, மோசடியாக சொத்துக்களையும், பணத்தையும் அபகரித்துள்ளனர் என்றும், அத்தோடு மைனர்களான மனுதாரர்களின் சொத்துக்களை பொறுத்து 2–வது பிரதிவாதி கோபாலகிருஷ்ணன் மற்றும் அவர்களின் கூட்டாளிகள் பெயரில் போலியாக விலைபத்திரங்கள்

தயாரித்துள்ளனர் என்றும், 1-வது மனுதாரர்/1-வது வாதி 29.12.2017 அன்று மேஜரான பின் 1-வது மனுதாரருக்கு 2018-ல் திருமணம் நடந்தது என்றும், 1, 2 எதிர்மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகளின் திட்டமிட்ட சதி செயல்கள் இப்போது தான் மனுதாரர்களுக்கு தெரியவந்தது என்றும், மனுதாரர்களின் தந்தை பொன்னுசாமி நாடார் அவரது சொத்துக்களில் ஒரு பகுதியை 23.10.2013 அன்று ராஜாக்கமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட 2958/2003-ம் எண் ஆவணத்தின்படி பட்டிகை சொத்தோடு சேர்ந்த 2.30 எக்கர் சொத்து மற்றும் 13 அயிட்ட சொத்துக்களை மனுதாரர்கள் மைனர்களாக இருந்தபோது செட்டில்மெண்டு செய்துள்ளார் என்றும், 1, 2 பிரதிவாதிகள் அந்த சொத்துக்களை அபகரிக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தோடு மனுதாரர்களின் தந்தை பொன்னுசாமி நாடாரிடம் பொய்யான காரணங்களை கூறி மனுதாரர்களின் தந்தை பொன்னுசாமி நாடாரிடமிருந்து 2-வது பிரதிவாதி 187/2011 எண்ணாக சட்டவிரோதமாக ஒரு பவர் பத்திரம் பதிவு செய்து வாங்கியுள்ளார் என்றும், மனுதாரர்கள் அந்த பவர் பத்திரம் எழுதி கொடுக்காததால் அந்த பவர் பத்திர நகலை ராஜாக்கமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் தர மறுத்துவிட்டதுமாகும் என்றும், ஆதலால் மேற்படி ஆவணத்தை சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து நீதிமன்றத்திற்கு தருவிக்க நீதிமன்றம் உத்தரவிட வேண்டியதுமாகும் என்றும், மனுதாரர்களின் தந்தை பொன்னுசாமி நாடார் பட்டிகை சொத்தை பொறுத்து பவர் எழுதி கொடுக்க உரிமை கிடையாது என்றும், 2-வது பிரதிவாதி பவர்தாரராக பத்திரங்கள் எழுதி வாங்கவும், பதிவு செய்யவும் உரிமை கிடையாது என்றும், அவ்வாறு ஏற்படுத்திய பவர் பத்திரங்களும், விலை பத்திரங்களும், வேறு எந்தவிதமான பத்திரங்களும் சட்டப்படி செல்லாது என்றும், வாதிகளாகிய மனுதாரர்களை எந்தவிதத்திலும் கட்டுப்படுத்தாததும், இல்லாதவையுமாகும் என்றும், 1-வது பிரதிவாதியும், 2-வது பிரதிவாதியும் கூட்டாக சதி செய்து மனுதாரர்களின் சொத்துக்களை அபகரிப்பதற்காக கெட்ட எண்ணத்தில் பெயரளவில் 1-வது பிரதிவாதி பெயரில் போலியான 2252/2012 எண் கிரய பத்திரத்தை ராஜாக்கமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் மோசடியாக பதிவு

செய்து வைத்துள்ளனர் என்றும், மேற்படி கிரையப்பத்திரம் சட்டப்படி செல்லாது என்றும், வாதிகளை பெந்திக்காது என்றும், மேற்படி கிரைய பத்திரத்தில் விற்பனை விலை என குறிப்பிட்டுள்ள தொகை மைனர்களாக இருந்த மனுதாரர்களுக்கு எத்தருணத்திலும் எந்தவிதத்திலும் கிடைக்கவுமில்லை என்றும், மனுதாரர்களுக்கு உரிமையும் வழக்கு பட்டிகை சொத்தையோ வேறு சொத்துக்களையோ மனுதாரர்களுக்கு விற்பனை செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்படவும் இல்லையென்றும், மேற்படி சொத்து நீண்டகரை 'A' வில்லேஜிலிருந்து பிரித்து தற்போது நீண்டகரை 'A' கிழக்கு வில்லேஜ், புதுசர்வே 16/15–1 மற்றும் புது சர்வே 16/22–18–ல் அமைந்துள்ளன என்றும், வழக்கு பட்டிகை சொத்தை விற்க மனுதாரர்களின் தந்தை பொன்னுசாமி நாடாருக்கோ, 2–வது பிரதிவாதிக்கோ உரிமை கிடையாது என்றும், அதிகாரமும் கிடையாது என்றும், பட்டிகை சொத்தை பொறுத்து விலைப்பத்திரம் வாங்க 1–வது பிரதிவாதிக்கு எந்தவித உரிமையும் கிடையாது என்றும், பட்டிகை சொத்தை 1–வது பிரதிவாதி பெயருக்கு விற்பதற்கு, விலைபத்திரம் எழுதி கொடுக்க 2–வது பிரதிவாதிக்கு எந்தவித உரிமையும் கிடையாது என்றும், மேற்படி கிரைய பத்திரம் சட்டப்படி செல்லாது என்றும், மனுதாரர்களுக்கு யாதொரு பாகமும் கிடைக்கவில்லை என்றும், பத்திரத்தில் சொல்லியிருக்கும் விஷயங்கள் அனைத்து பொய் என்றும், மனுதாரர்கள் மேற்படி பவர் பத்திரத்திலோ கிரைய பத்திரத்திலோ கட்சிகளும் இல்லையென்றும், மனுதாரர்களின் சொத்துக்களை பொறுத்து மனுதாரர்கள் மைனர்களாக இருந்த போது போலியாக ஆவணங்கள் தயார் செய்யப்பட்டுள்ளன என்றும், சொத்துக்கள் கைமாற்றமும் செய்யப்படவில்லை என்றும், மேற்படி காரணங்களால் பட்டிகை சொத்தை பொறுத்து பெயரளவில் போலியாக தயாரித்து ராஜாக்கமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் 2252/2012–ம் எண்ணாக பதிவு செய்யப்பட்டுள்ள கிரையப்பத்திரம் சட்டப்படி செல்லாததும், இல்லாததுமாகும் என்றும், வாதிகளை அவை எந்தவிதத்திலும் பெந்திக்காது என்றும், 2–வது பிரதிவாதிக்கு பொது அதிகார ஆவணம் எழுதி கொடுக்க பொன்னுசாமி நாடாருக்கும், உரிமையோ அதிகாரமோ கிடையாது என்றும், அதனால் இராஜாக்கமங்கலம் சார்பதிவாளர்

அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட பொது அதிகார ஆவண எண்.187/2011 சட்டப்படி செல்லாது என்றும், அவற்றால் மனுதாரர்களின் உரிமை பாதிக்கப்படாது என்றும், வைகுண்டமணி, கலாவதி, கோபாலகிருஷ்ணன் மற்றும் அவர்களின் கூட்டாளிகள் செய்துள்ள மோசடிகளுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டி மனுதாரர்களின் தாயார் காவல்துறை கண்காணிப்பாளரிடம் மனுக்கள் கொடுத்த பின்பும், T. வைகுண்டமணி கூட்டத்தார் அதிகாரிகளை சுவாதீனப்படுத்தி மனுதாரர்களின் தாயார் குமாரிதங்கம் கொடுத்த மனுக்களின் மீது முறையான விசாரணை நடக்காமல் செய்து விட்டனர் என்றும், குமாரிதங்கம் கொடுத்த மனுக்களின் மீதும் காவல்துறை முறையாக நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றும், இத்தருணத்தில் விசாரித்த போது T. வைகுண்டமணி கூட்டத்தார் அவருக்கு வேண்டிய நபர்களை பயன்படுத்தி மேலும் போலி ஆவணங்களை தயாரித்து மைனர்களாக இருந்து இப்போது மேஜராகியிருக்கும் மனுதாரர்களின் அனுபவத்தில் இருக்கும் மனுதாரர்களின் சொத்தை அபகரிக்க திட்டமிட்டு மோசடியாக சட்டப்படி செல்லாத போலி ஆவணங்களை தயாரித்து செயல்படுவது தெரியவந்துள்ளது என்றும், அந்த மோசடி ஆவணங்கள் 1, 2 பிரதிவாதிகளால் போலியாக தயாரித்து இராஜாக்கமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள போலி கிரையபத்திரம் எண்.2252/2012 என்றும் மற்றும் 2-வது பிரதிவாதி பதிவு செய்துள்ள போலி பவர் பத்திரம் என்றும், மனுதாரர்கள் மைனர்களாக இருந்த போது மனுதாரர்களுக்கு உரிமைப்பட்ட சொத்தை பொறுத்து சட்டப்படி செல்லாத பத்திரங்களை பத்திரபதிவு செய்ததால் ராஜாக்கமங்கலம் சார்பதிவாளரை 3-வது பிரதிவாதி வழக்கில் கட்சியாக சேர்க்கப்பட்டுள்ளார் என்றும், 1, 2 பிரதிவாதிகள் கூறும் நபர்களுக்கு பட்டிகை சொத்தை பொறுத்து ராஜாக்கமங்கலம் சார்பதிவாளர் மேலும் பத்திரம் பதிவு செய்தால் வாதிக்கு ஈடு செய்ய முடியாத இழப்புகள் ஏற்படும் என்றும், ராஜாக்கமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்த பவர் பத்திர எண்.187/2011-ம் கிரைய ஆவணம் 2252/2012-ம் சட்டவிரோதமான போலி ஆவணங்கள் என்றும், மனுதாரர்கள் மைனர்களாக இருந்த போது மோசடியாக

தயாரிக்கப்பட்டுள்ளதால் அவற்றை செல்லாதென ஸ்தாபித்து உத்தரவிடாவிட்டால் மனுதாரர்களுக்கு ஈடு செய்ய முடியாத இழப்புகள் ஏற்படும் என்றும், ஆதலால், வழக்கு தாக்கல் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்றும், மனுதாரர்கள்/வாதிகளால் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், ஆதலால் பிரதிவாதிகளோ, அவர்கள் ஆட்களோ பத்திரங்கள் பத்திரங்கள் பதிவு செய்தோ வேறு விதங்களிலோ பட்டிகை வஸ்துவில் வாதிகளின் அனுபவத்திற்கு இடைஞ்சல் செய்யக்கூடாதென வழக்கு முடியும் வரை ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளை பிறப்பிக்க வேண்டி மனுதாரர்கள்/வாதிகளால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **<u>2-வது பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரை எதிருரையாக 2வது எதிர்மனுதாரரால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது அதன் சுருக்கம்:-</u>**

இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும், அசல் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும், 2வது பிரதிவாதி வாதிகளின் தாயாரின் நெருங்கிய உறவினர் என்றும், 2வது பிரதிவாதி வாதி குடும்பத்தின் கார்டியனாக செயல்பட்டார் என்றும், பொன்னுசாமியின் முதலாவது மனைவியால் பல வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டது என்பது உண்மை, அந்த சமயத்தில் 2வது பிரதிவாதி மற்றும் கோபால கிருஷ்ணன் ஆகியோர் காலஞ்சென்ற பொன்னுசாமிக்கு ஆதரவாக இருந்தனர் என்றும், மேற்படி காலஞ்சென்ற பொன்னுசாமியால் கொல்லம் உரிமையியல் நீதிமன்றத்தில் CS.No.743/2003 வழக்கானது தாக்கல் செய்யப்பட்டது என்றும், அந்த வழக்கை 2ம் பிரதிவாதி கவனித்து வந்தார் என்றும், காலஞ்சென்ற பொன்னுசாமியின் முதலாவது மனைவியால் ஆட்கொணர்வுமனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனு 15.08.2005ல் தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், அதன் பிறகு காலஞ்சென்ற பொன்னுசாமியின் மனநிலை குறித்து கேள்வி எழுப்பி சுகுமாரி பிரதிபாவால் மாவட்ட நீதிமன்றத்தில் MHOP.113/2007 தாக்கல்செய்யப்பட்டது என்றும், அதன் பிறகு காலஞ்சென்ற பொன்னுசாமியால்

கன்னியாகுமரி மாவட்ட நீதிமன்றத்தில் அ.வ.எண்.98/2008 தாக்கல் செய்யப்பட்டது என்றும், அதன் பிறகு சுகுமாரி பிரதிபாவால் பல வழக்குகள் காலஞ்சென்ற பொன்னுசாமிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டது அந்த சமயத்தில் 2 வது பிரதிவாதி உறுதுணையாக இருந்தார் என்றும், 2–வது எதிர்மனுதாரர் காலம் சென்ற பொன்னுசாமி மற்றும் அவரது குடும்பத்தின் நலனுக்காக பணியாற்றினார் என்றும், மேற்படி, காலம் சென்ற பொன்னுசாமி தனது வாழ்நாளில் பல வழக்குகளை இந்த வழக்கு தபசில் சொத்து உள்ளடங்க பல சொத்துக்களை விற்பனை செய்துள்ளார் என்றும், 1–வது வாதி மோசமான குணநலன் கொண்டவர் என்றும், 2–வது பிரதிவாதியின் வாதிகளின் நலனுக்காக அறிவுரைகளை கூறி வந்தார் என்றும், மேற்படி, 1–வது வாதி அஜித் என்பவருடன் சென்றுவிட்டார், அதனால் நேசமணி காவல் நிலையத்தில் குற்ற எண்.275/2015 இ.த.ச. பிரிவுகள் 365, 395, 379 (NP), 452, 148–ன் கீழான வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், 2–வது பிரதிவாதியின் முயற்சியால் 1–வது வாதி அஜித்துடன் செல்வது தடுக்கப்பட்டது என்றும், 2–வது பிரதிவாதி வாதிகளின் நெருங்கிய உறவினர் என்பதால் 1–வது வாதிக்கு அஜித்துடன் சென்றது சம்பந்தமாக அறிவுரை கூறினார், அந்த முன்விரோதத்தின் காரணமாக 1–வது வாதி, 2–வது பிரதிவாதியிடம் முன்விரோதம் கொண்டுள்ளார் என்றும், மேலும், 1–வது வாதி தங்கேஸ்வரன் என்பவருடன் திருமணம் செய்து கொண்டார் என்றும், 1–வது வாதி மற்றும் தங்கேஸ்வரன் 2–வது பிரதிவாதிக்கு எதிராக கெட்ட எண்ணம் கொண்டுள்ளனர் என்றும், 2–வது பிரதிவாதியின் மனைவி வாதியின் குடும்பம் குறித்தோ, அதன் சொத்துக்கள் குறித்தோ எந்த செயலும் செய்ததில்லை என்றும், வேண்டுமென்றே இந்த வழக்கில் 2–வது பிரதிவாதியின் மனைவி கட்சி சேர்க்கப்பட்டுள்ளார் என்றும், காலம் சென்ற பொன்னுசாமியால் செட்டில்மென்ட் ஆவணம் எண்.2958/2003 வாதிகள் பெயருக்கு பொன்னுசாமியை கார்டியனாக நியமித்து பிறப்பிக்கப்பட்டது என்றும், மேற்படி, ஆவணம் சுகுமாரி பிரதீபா என்பவரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளிலிருந்து சொத்தை பாதுகாப்பதற்காக பிறப்பிக்கப்பட்டது என்றும், காலம் சென்ற பொன்னுசாமி தனக்கு

ஏற்பட்ட நிதிநெருக்கடி நிலை காரணமாக மேற்படி, செட்டில்மென்ட் ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள சொத்துக்களை விற்பனை செய்துள்ளார் என்றும், வாதிகள் இளவராக இருந்த போது, அவர்களின் நலனுக்காக வாதிகளின் தாயார் குமாரித்தங்கம் அறியும் வகையில் தனது சொத்துக்களை விற்பனை செய்தார் என்றும், எல்லா பரிவர்த்தனைகளிலும் வாதிகளின் தாயார் ஒரு சாட்சி என்றும், அவரது சம்மதத்தின் பெயரிலேயே அனைத்து ஆவணங்களும் பிறப்பிக்கப்பட்டது என்றும், 2–வது பிரதிவாதி மோசடியாக ஆவணங்களை பிறப்பித்து சொத்துக்களை அபகரித்துக்கொண்டார் என்பது உண்மையல்ல என்றும், காலம் சென்ற பொன்னுசாமியால் 2–வது வாதிக்கு பிறப்பிக்கப்பட்ட பொது அதிகார ஆவணம் எண்.187/2011 அதில், வாதிகளின் தாயாரான குமாரிதங்கம் கையொப்பம் போட்டுள்ளார் என்றும், மேற்படி பொது அதிகார ஆவணத்தின் அடிப்படையில் வழக்கு சொத்தான 4.639 சென்ட் சொத்துக்களை 1–வது பிரதிவாதிக்கு, 2–வது பிரதிவாதி கிரையம் கொடுத்தார் என்றும், மேலும், 2–வது பிரதிவாதி 51.680 சென்ட் சொத்தினை பாதை அவகாசத்துடன் விற்பனை செய்தார் என்றும், 2–வது பிரதிவாதி பவர் ஆவணத்தின் அடிப்படையில் பல சொத்துக்களை விற்பனை செய்துள்ளார் என்றும், மேற்படி விற்பனை செய்யப்பட்ட சொத்துக்களிலிருந்து பெறப்பட்ட மறுபயன் தொகையானது வாதிகளின் வங்கி கணக்கில் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றும், வாதிகளுக்கும், அவர்களின் தாயாரான குமாரித்தங்கம் தங்களது வங்கி கணக்கில் தொகையானது deposit செய்யப்பட்டது தெரியும் என்றும், குமாரித்தங்கம் தற்போது வாதிகளுடன் சேர்ந்து கொண்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், காலம் சென்ற பொன்னுசாமியால் 2–வது பிரதிவாதி பெயருக்கு பொது அதிகார ஆவண எண்.187/2011 பிறப்பிக்கப்பட்டது என்றும், அதன்படியே, வாதிகளின் நலனுக்காக சொத்துக்களின் விற்பனையானது செய்யப்பட்டது என்றும், வாதிகளின் தந்தை மற்றும் தாயார் செற்றில் மெண்ட் ஆவண எண்.2958/2003 ல் உள்ள சில சொத்துக்களை 19.02.2011 அன்று E.M. ராமசந்தர் அவரின் சட்டக்கருத்துரை பெற்று மார்க்கெட் விலைக்கு விற்பனை செய்தனர்

என்றும், மணவாளக்குறிச்சி ரீசர்வே எண். 524/5 ல் உள்ள சொத்தானது அர்பின் பென்சாம் என்பவருக்கு 11.05.2010 ல் ஆவண எண்.928/2010 மூலமாக எந்த நீதிமன்றத்திலும் அனுமதி பெறாமல் விற்பனை செய்யப்பட்டது என்றும், அதன் பிறகு மணவாளக்குறிச்சி ரீசர்வே எண். 481/4 ல் உள்ள சொத்தானது 15.02.2018 ல் சந்திரசேகர் என்பவருக்கு 1 வது வாதி மற்றும் அவரது தாயாரால் விற்பனை செய்யப்பட்டது என்றும், பின்னர் மணவாளக்குறிச்சி ரீசர்வே எண்.340/7 ல் உள்ள சொத்தானது ரெத்தினகுமாரி என்பவருக்கும் ரீசர்வே எண். 476/1 ல் உள்ள சொத்தானது லேகா என்பவருக்கும் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் மூலமாக கிரயம் கொடுக்கப்பட்டது என்றும், மேற்படி மொத்த சொத்துக்களும் 2 ம் வாதியான மைனருக்காக நீதிமன்றத்தில் அனுமதி பெறாமல் பிறப்பிக்கப்பட்டது என்றும், மேற்படி ஆவணங்களை 2 ம் பிரதிவாதி சாட்சியத்தின் போது தாக்கல் செய்வார் என்றும், 1 ம் பிரதிவாதி மேற்படி சொத்துக்களை கிரயம் பெற்ற பிறகு வேலி அமைத்து தனது அனுபவத்தில் வைத்துள்ளார் என்றும், இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல அவசிய தரப்பினரை சேர்க்காததால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், இம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என 2 வது எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்உரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) **<u>3–வது பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:–</u>**

இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும், அசல் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும், நீதிமன்ற நடவடிக்கையை வாதி தவறாக பயன்படுத்துகிறார் என்றும், உண்மையான விவரங்கள் மனுதாரர்களால் மறைக்கப்பட்டுள்ளது என்றும், பிரதிவாதிகளால் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அதனையும், இந்த எதிருரையின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்றும், வழக்கு தபசில் சொத்தின் விவரிப்பு சரியானதல்ல என்றும். இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்க முதன்மை தோற்ற வழக்கு, வசதிகளின் சமநிலை மனுதாரர்கள்/வாதிகளுக்கு ஆதரவாக இல்லையென்றும்,

இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்கப்பட்டால் எதிர்மனுதாரர்களுக்கு மிகுந்த கஷ்ட நஷ்டம் ஏற்படும் என்றும், இம்மனு தேவையில்லாத தரப்பினர்களை சேர்த்த காரணத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், மனுதாரர்களின் மனுவில் நல்லெண்ணம் இல்லையென்றும், எனவே மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும், எனவே மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்று 3–வது எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5) இந்த மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில், இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

6) **<u>தீர்வுக்குரிய பிரச்சனை</u>** :

இம்மனுவின் 1வது மனுதார் மற்றும் 2வது எதிர்மனுதாரர் தரப்பில் வாதஉரைக்கு இந்நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. ஆகையால் 1வது மனுதார் மற்றும் 2வது எதிர்மனுதாரர் தரப்பு வாதவுரை இந்நீதிமன்றத்தால் முடித்து வைக்கப்பட்டுள்ளது. 3வது எதிர்மனுதாரர் தரப்பு வாதவுரை கேட்கப்பட்டது. ஆவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது.

7) மனுதாரர்கள் / வாதிகளால் அசல் வழக்கானது பொய்யான காரணங்களை சொல்லி பொன்னுசாமி நாடாரை ஏமாற்றி அவரிடம் இருந்து சட்டவிரோதமாக ராஜாக்கமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் 2–வது பிரதிவாதி பதிவு செய்து வழங்கியுள்ள பவர் பத்திர எண்.187/2011 சட்டப்படி செல்லாதென உத்தரவு பிறப்பிக்க வேண்டியும், ராஜாக்கமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் 1, 2 பிரதிவாதிகள் பதிவு செய்த விற்பனை பத்திர எண். 2252/2012 சட்டப்படி செல்லாதென உத்தரவு பிறப்பிக்க கோரியும், வழக்கு பட்டிகை சொத்தில் 1, 2 பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, பட்டிகை சொத்தில் அத்துமீறி பிரவேசித்தோ, வேறு விதங்களிலோ வழக்கு பட்டிகை சொத்தில் மனுதாரர்கள்/வாதிகளின் அனுபவத்திற்கு எந்த விதத்திலும் இடைஞ்சல்

செய்யக்கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பிறப்பிக்க கோரியும், வழக்கு பட்டிகை சொத்தை பொறுத்து 1, 2 பிரதிவாதிகள் மற்றும் அவர்கள் ஆட்கள் கூறும் நபர்களுக்கு பத்திரங்கள் பதிவு செய்து மனுதாரர்கள்/வாதிகளுக்கு நஷ்டங்கள் ஏற்படுத்தக்கூடாதென 3-வது பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பிறப்பிக்க வேண்டி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8) 1வது மனுதாரர்/1வது வாதியால் இம்மனுவானது எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளோ, அவர்களது வகையாட்களோ பத்திரங்கள் பதிவு செய்தோ வேறு விதங்களிலோ பட்டிகை வஸ்துவில் மனுதாரர்கள்/வாதிகளின் அனுபவத்திற்கு இடைஞ்சல் செய்யக்கூடாதென அசல் வழக்கு முடியும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளை பிறப்பிக்க கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

9) தற்பொழுது அசல் வழக்கானது ஆரம்ப நிலையில் உள்ளது. அசல் வழக்கின் முழுமையான சாட்சி விசாரணைக்கு பிறகே இந்நீதிமன்றத்தால் இரு தரப்பினர்களுக்கிடையேயான கீழ்க்கண்ட முக்கிய பிரச்சனைகளான,

i) ராஜாக்கமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள 2-வது பிரதிவாதி பெயரிலான பவர் பத்திர எண். 187/2011 சட்டப்படி செல்லத்தக்கதா? இல்லையா? என்பது குறித்தும்,

ii) ராஜாக்கமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள 1-வது பிரதிவாதி பெயரிலான விற்பனை பத்திர எண். 2252/2012 சட்டப்படி செல்லத்தக்கதா? இல்லையா? என்பது குறித்தும்,

iii) 1 வது மனுதாரர் 1,2 பிரதிவாதிகளுக்கு எதிராக கோரிய நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் 1–வது மனுதாரருக்கு கிடைக்கக்கூடியதா? என்பது குறித்தும்,

iv) 1 வது மனுதாரர் 3–வது பிரதிவாதிக்கு எதிராக கோரிய நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கக்கூடியதா? என்பது குறித்தும், இந்நீதிமன்றத்தால் முடிவு காண இயலும்.

10) மேலும், தபசில் சொத்து மீதான 1 வது மனுதாரர்/1 வது வாதியின் அனுபவத்தை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் பத்திரங்கள் பதிவு செய்து வேறு விதத்தில் இடையூறு செய்துவருகிறார் என்பதை நிரூபணம் செய்யும் வகையில் 1–வது மனுதாரர்/1–வது வாதி தரப்பில் எவ்வித சாட்சி சான்றாவணங்களும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை.

11) மேலும், 1 வது மனுதாரர்/1 வது வாதி தரப்பில் இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவு பெறுவதற்கான முதன்மை தோற்ற வழக்கு, வசதிகளின் சமநிலை, ஈடுசெய்ய முடியாத இழப்பு 1 வது மனுதாரர்/1 வது வாதிக்கு ஆதரவாக உள்ளது என்பதை நிரூபணம் செய்யும் வகையில் எவ்வித சாட்சி சான்றாவணங்களும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை.

12) 1 வது மனுதாரர்/1 வது வாதியால் அசல் வழக்கில் கேட்கப்பட்ட பரிகாரங்கள் 1 வது மனுதாரர்/1 வது வாதிக்கு கிடைக்கக்கூடியதா? இல்லையா? என்பதை இரு தரப்பு சாட்சி விசாரணைக்கு பிறகே இந்நீதிமன்றத்தால் முடிவு காணக்கூடிய நிலையில், அசல் வழக்கில் கேட்கப்பட்ட அதே பரிகாரம்( Main Relief) குறித்து இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்கும்படி 1 வது மனுதாரர்/1 வது வாதி இம்மனுவில் பரிகாரம் கேட்பது சட்டப்படி சரியானது அல்ல.

13) எனவே, மேற்கண்ட பரிசீலனையிலிருந்து, 1வது மனுதாரர்/1வது வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவானது நீதியின் நலன் கருதி அனுமதிக்கப்படத்தக்கதல்ல என்று இம்மனுவிற்கு இந்நீதிமன்றத்தால் முடிவு காணப்படுகிறது.

**14) இறுதியாக,**

இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படுகிறது. தரப்பினர்கள் தங்கள் செலவுத்தொகைகளை தாங்களே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, 2024-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 20-ம் நாளாகிய இன்று திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd/-
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
நாகர்கோவில்.

1. 1வது மனுதாரர்/1வது வாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :

-இல்லை-

2. எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் : இல்லை

Sd/-
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
நாகர்கோவில்.

P*DM, Nagercoil.*
*Draft/Fair common Order*
*I.A.No. 2/2020*
*in O.S.No.199/2020*
*Date:20.11.2024.*